# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., **DHINATH DHALAM** Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 110 | சனிக்கிழமை Saturday | 18.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹6 | ஈரோடு Erode


# இந்தியாவின் முதல் ஹைட்ரஜன் ரெயிலை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்



புதுடெல்லி: நாட்டின் முதலாவது ஹைட்ரஜன் ரயிலைபிரதமர்நரேந்திர மோடி, ஹரியானாவின் ஜிந்த் பகுதியில் இருந்து கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

ஜிந்த் ரயில் நிலையத்தில் நடைபெற்ற தொடக்க விழாவில், பிரதமர் நரேந்திர மோடி,ரயில்வேஅமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், ஹரியானா ஆளுநர் அசிம் குமார் கோஷ், முதல்வர் நயாப் சிங் சைனி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பிரதமர் மோடி கொடி அசைத்து தொடங்கி வைத்ததை அடுத்து, ஜிந்த் ரயில் நிலையத்தில் இருந்து சோனிபட் ரயில் நிலையத்தை நோக்கி ஹைட்ரஜன் ரயில் புறப்பட்டது. ரயிலில் பள்ளி மாணவர்கள் பலரும் பயணித்தனர்.

நிகழ்ச்சியில், ரூ.14,700 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள், பல்வேறு திட்டங்களுக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். தொடர்ந்து, ஹரியானாவில் ரூ.12, 470 கோடி, சண்டிகரில் ரூ.4,700 கோடி,பஞ்சாபில் ரூ.5,470 கோடி மதிப்பிலான பல்வேறு வளர்ச்சித் திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, "இன்று ஹரியானாவும், ஜிந்த் பகுதியும் வரலாற்றில்இடம்பிடித்துள்ளன. இங்கிருந்து முதல் ஹைட்ரஜன் ரயிலை நாடு பெற்றுள்ளது.

நாட்டின் முதல் ரயில் மும்பை - தானேவுக்கு இடையே இயக்கப்பட்டது என்ற செய்தியை நீங்கள் படித்திருப்பீர்கள், கேட்டிருப்பீர்கள். அதேபோல், வரும்காலத்தில் நாட்டின் முதல் ஹைட்ரஜன் ரயில் குறித்த செய்தி வரும்போது ஹரியானா, ஜிந்த், பானிபட் ஆகிய பெயர்கள் இடம்பெறுவதை தவிர்க்க முடியாது.

நான் ஜிந்த் நகருக்கு வரும்போது எனது பழைய நினைவுகள் மீண்டும் நினைவுக்கு வந்தன. பல பத்தாண்டுகளுக்கு முன்பு நான் அமைப்பு ரீதியிலான பணிகளுக்காக ஜிந்த் வந்தபோது நீங்கள் காட்டிய அன்பும் அரவணைப்பும் இன்றும் மறக்க முடியாததாக உள்ளது" என தெரிவித்தார்.

முதல் ஹைட்ரஜன் ரயில் உருவாக்கத்தின் பின்னணி:

இந்தியாவில் ஹைட்ரஜன் எரிபொருளில் இயங்கும் வகையிலான ரயில் இன்ஜினை தயாரிக்க கடந்த 2021-ம் ஆண்டு முயற்சிகள் தொடங்கின.ரூ.136கோடி மதிப்பீட்டில் வடக்கு மண்டல ரயில்வே இத்திட்டத்தை 2022 ஏப்ரலில் தொடங்கியது.

இத்திட்டத்துக்கான டெண்டர் ஹைதராபாத்தை சேர்ந்த மேதா நிறுவனத்துக்கு வழங்கப்பட்டது. இந்நிறுவனம்தான் எரிபொருட்களைசப்ளை செய்கிறது. ஹைட்ரஜன் ரயிலை வடிவமைக்கும் பணிகள் சென்னை பெரம்பூரில் உள்ள ரயில் பெட்டிதொழிற்சாலையில் (ஐசிஎ:ப்) நடைபெற்றன. பணிகள் முடிந்ததைத் தொடர்ந்து சோதனை ஓட்டங்களும் நடைபெற்றன.

இதையடுத்து, ரயிலை அறிமுகப்படுத்த கடந்த மே 22-ம் தேதி ரயில்வே வாரியம் ஒப்புதல் அளித்தது. இந்நிலையில், நாட்டின் முதலாவது ஹைட்ரஜன் ரயிலை பிரதமர் மோடி இன்று கொடியசைத்து தொடங்கி வைக்கிறார். ஜெர்மனியில் முதன் முதலாக உலகின் முதல் ஹைட்ரஜன் பயணிகள் ரயில் 2018-ம் ஆண்டில் இயக்கப்பட்டது. பின்னர் ஜப்பான், சீனா, அமெரிக்கா தங்கள் நாடுகளில் தயாரிக்கப்பட்ட ஹைட்ரஜன் ரயிலை இயக்கின என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழகத்துக்கு பெருமை சேர்க்கும் விதமாக, இந்த வரலாற்றுச் சிறப்புமிக்கமுதல்ஹைட்ரஜன் ரயில், சென்னை பெரம்பூரில் உள்ள ஒருங்கிணைந்த ரயில் பெட்டி தொழிற்சாலையில் (ஐசிஎ:ப்) முழுமையாக வடிவமைக்கப் பட்டு தயாரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. அதிகபட்ச கட்டணம் ரூ.25: சுற்றுச்சூழலுக்கு கேடு விளைவிக்காத இந்த ஹைட்ரஜன் ரயில், ஹரியானா மாநிலத்தின் மின்மயமாக்கப்படாத 89 கி.மீ. நீளமுள்ள ஜிந்த் - சோனிபட் வழித்தடத்தில் உள்ள 12 ரயில் நிலையங்களைஇணைக்கும் வகையில் இயக்கப்படுகிறது. இந்த ரயில் தினமும் 2 முறை இருமார்க்கங்களிலும் இயக்கப்படும். ஏழை, நடுத்தர மக்கள் பயன்பெறும் வகையில் இதன் பயணக் கட்டணம் மிகக் குறைவாக ரூ.5 முதல் அதிகபட்சமாக ரூ.25 வரை மட்டுமே நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இந்த ரயில் பாரம்பரிய டீசல் அல்லது மின் சார வயர்களுக்கு பதிலாக, அதிநவீன 1200 கிலோவாட் ஹைட்ரஜன் எரிபொருள் மின்கல தொழில்நுட்பத்தில் இயங்குகிறது. ரயில் வேகம் எடுக்கும்போது உந்துதலை தரலித்தியம் பெரோபாஸ்பேட் பேட்டரிகளும், ரயில் வேகம் குறையும் போது பேட்டரியை தானாகவே ரீசார்ஜ் செய்யும்மறுஉருவாக்க தொழில்நுட்பமும் இணைக்கப்பட்டுள்ளன. இந்த ஹைட்ரஜன் ரயில் 2 ஓட்டுநர் பெட்டிகள், 8 பயணியர் பெட்டிகள் என 10 பெட்டிகளைக் கொண்டது. ஒரே நேரத்தில் 2,600க்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிச் செல்லும் திறன் கொண்டது. சோதனையின்போது இந்த ரயில் அதிகபட்சமாக மணிக்கு 120 கி.மீ. வேகத்தை தொட்டது. ஆனாலும், பாதுகாப்பான, வழக்கமான இயக்கத்துக்காக மணிக்கு 75 கி.மீ.வேகத்தில்மட்டுமே இயக்கப்பட உள்ளது.

# தமிழ்நாடு முழுவதும் 50 டெண்டர்கள் ரத்து முதலமைச்சர் விஜய் அதிரடி உத்தரவு



சென்னை: கடந்த ஆட்சியில் வழங்கப்பட்ட டெண்டர்களில் ஏகப்பட்ட முறைகேடு இருப்பதாக விமர்சனங்கள் எழுந்திருந்தன. இப்படி இருக்கையில், முதலமைச்சர் விஜய் வசம் உள்ள நகராட்சி நிர்வாக துறையில் 50க்கும் மேற்பட்ட டெண்டர்கள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன.

டெண்டர்கள் கோர குறுகிய காலமேஅவகாசம் வழங்கப்பட்டிருந்ததாக விமர்சனங்கள் எழுந்திருந்தன.இதையடுத்து நிர்வாக காரணங்களுக்காக இந்த டெண்டர்கள் ரத்து செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சராக விஜய் பொறுப்பேற்ற பின்னர், லஞ்சம் ஒழிப்பு குறித்து தீவிரமாக பேசி வருகிறார். கடந்த 60 ஆண்டு கால திராவிட ஆட்சியில், லஞ்சம் பெரிய அளவில் சமூகத்தை அரித்திருக்கிறது என்றும், லஞ்சம், ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகள் தீவிரமடையும் என்றும் முதல்வர் விஜய் கூறியிருந்தார். அதன்படி கடந்த ஆட்சியில் போடப்பட்ட டெண்டர்கள் குறித்து ஆய்வை தீவிரப்படுத்தியிருந்தார். துறை ரீதியில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது வந்தது. ஆய்வில் பலடெண்டர்கள் போதுமான கால அவகாசத்துடன் வழங்கப்படவில்லை என்றும், இதில் வெளிப்படைத்தன்மை இல்லை என்றும் தெரிய வந்திருக்கிறது. அதாவது டெண்டர் அறிவிக்கப்பட்டு 1-3 நாட்கள் வரை மட்டுமே அவகாசம் வழங்கப்பட்டிருக்கிறது.

இதையடுத்து இந்த டெண்டர்கள் அதிரடியாக ரத்து செய்யப்பட்டு வருகின்றன. அந்த வகையில், தற்போது முதலமைச்சர் விஜய் வசம் உள்ள நகராட்சி நிர்வாகத்துறையில் 50க்கும் மேற்பட்ட டெண்டர்கள் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. கோத்தகிரி நகராட்சியில் 3 டெண்டர்கள், செங்கம் நகராட்சியில் 2 டெண்டர்கள், உடுமலைப்பேட்டை நகராட்சியில் 30 டெண்டர்கள் ரத்து செய்யப்பட்டிருக்கின்ன. இது தவிர, மணப்பாறை, பெரம்பலூர், திருவள்ளூர்,திருவையாறு உள்ளிட்ட நகராட்சிகளில் 20க்கும் மேற்பட்ட டெண்டர்களும் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. இதே போல, கடந்த 2021ல் திமுக புதியதாக ஆட்சி பொறுப்புக்கு வந்தபோது சென்னை மாநகராட்சியில் மட்டும் 250க்கும் மேற்பட்ட டெண்டர்கள் ரத்து செய்யப்பட்டனஎன்பது குறிப்பிடத்தக்கது.


## வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்
கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா
திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்
ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்
வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்

தொடர்புக்கு : ☎ +919444082959


# ரூ.100 கோடி கோவில் நிலம் மோசடி வழக்கு: அறநிலையத்துறை அதிகாரிகளிடம் சி.பி.சி.ஐ.டி. போலீசார் விசாரணை

ரூ.100 கோடி கோவில் நிலம் மோசடி வழக்கு தொடர்பாக சி.பி.சி.ஐ.டி. போலீசார், விசாரணையைதொடங்கிஉள்ளனர்.

ரூ.100 கோடி மதிப்பிலான இந்த நிலம் கடந்த ஆண்டு பழனி முருகபக்தர்களின் வாகன நிறுத்துமிடமாக மாற்றப்பட்டது. இந்நிலையில் தண்டபாணி சுவாமி மட நிலம் கடந்த 6-ந்தேதி பழனி சார்பதிவாளர் அலுவலகத்தில் தனியார் 2 பேருக்கு ரூ.2 கோடிக்கு கிரையமாக பத்திரப்பதிவு செய்யப்பட்டது. பழனி கோவில் கட்டுப்பாட்டிலுள்ள நிலத்தை முறைகேடாக பதிவு செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.



இதனிடையே ரூ.100 கோடி நிலம் முறைகேடாக பதிவு செய்த சார்பதிவாளர் ஜஸ்டின் மணிகண்டன், மாவட்ட பதிவாளர்சசிகலாஆகிய 2 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர். தொடர்ந்து முறைகேடு பதிவை ரத்து செய்ய கோரி பழனி கோவில்இணைஆணையர் சார்பில் மதுரை ஐகோர்ட்டில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதை விசாரித்த ஐகோர்ட்டு தண்டபாணி சுவாமிமடத்தின்சொத்து தனியாருக்கு பத்திரப்பதிவு செய்தது செல்லாது என உத்தரவிட்டது. இந்நிலையில் இந்த முறைகேடு தொடர்பான வழக்கை சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றி தமிழக டி.ஜி.பி. மகேஷ்குமார் அகர்வால் உத்தரவிட்டார்.

சி.பி.சி.ஐ.டி. விசாரணை

அதையடுத்து சி.பி.சி.ஐ.டி. மதுரை போலீஸ் துணை சூப்பிரண்டு அஜய் தங்கம் தலைமையிலான 15 பேர் கொண்ட போலீஸ் குழுவினர் நேற்று பழனி வந்தனர். பின்பு முறைகேடு பதிவு குறித்து வழக்குப்பதிவு செய்து விசாரணையை தொடங்கினர். பழனி கோவில் அலுவலகம் சென்று, நிலத்தின் ஆவணங்களை சேகரித்தனர். பின்னர் அடிவாரத்தில் உள்ள தண்டபாணி சுவாமி மடத்து நிலத்தை பார்வையிட்டனர். அப்போது, நிலத்தின் வரைபடத்தை ஆய்வு செய்து அதன் எல்லைகளையும் பார்வையிட்டனர்.

இந்நிலையில் திண்டுக்கல் சி.பி.சி.ஐ.டி. அலுவலகத்தில் நிலம் முறைகேடு வழக்கு தொடர்ந்த முருகானந்தம் உள்பட அறநிலையத்துறைஅதிகாரிகளிடம் சி.பி.சி.ஐ.டி. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சஜிதா விசாரணை நடத்தி வருகிறார். மேலும் வருவாய்த்துறை மற்றும் பத்திரபதிவுத்துறை அதிகாரிகளிடமும் விசாரணை நடைபெற்று வருவதாகதகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## தேவகோட்டையில் உள்ள சேர்மன் மாணிக்கவாசகம் நடுநிலைப்பள்ளியில் பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கிய நகராட்சி தலைவர்



சிவகங்கை மாவட்டம், தேவகோட்டையில் உள்ளசேர்மன்மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் எழுதுபொருட்கள் வழங்கும் விழா சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு பள்ளி தலைமையாசிரியர் சொக்கலிங்கம் வரவேற்புரை வழங்கினார். தேவகோட்டை நகராட்சி தலைவர் சுந்தரலிங்கம் தலைமை வகித்து, மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் மற்றும் பரிசுகளை வழங்கினார்.

விழாவில் அவர் பேசுகையில், தனது தந்தையின் நினைவு நாளை முன்னிட்டு பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்படுவதாக தெரிவித்தார். மேலும், தனது தந்தையின் நினைவுகளை மாணவர்களுடன் பகிர்ந்து கொண்டு, கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

இந்நிகழ்வில் இரவுச்சேரி காசிலிங்கம் மற்றும்தளக்காவயல் முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் வன்மீகநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாணவி ரித்திகா நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். ஆசிரியை முத்துலட்சுமி நன்றியுரை வழங்கினார். விழாவிற்கான ஏற்பாடுகளை சரவணன் சிறப்பாக செய்திருந்தார். நிகழ்ச்சியின் பள்ளியில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் பேனா,பென்சில்,ஸ்கேல், வர்ணங்கள் உள்ளிட்ட பல்வேறு கல்வி எழுதுபொருட்கள் அடங்கிய பைகள் வழங்கப்பட்டன

## ஆலங்குளத்தில் காமராஜர் திருவுருவ சிலைக்கு 124 கிலோ எடையுள்ள ஆப்பிள் மாலை அணிவித்து மரியாதை செலுத்திய ஒன்றிய சேர்மன் திவ்யா மணிகண்டன்



ஆலங்குளத்தில் பெருந்தலைவர் காமராஜரின் 124-வது பிறந்த நாள் விழாவில்.

கல்வி தந்தை காமராஜரின் வெண்கலச் சிலைக்கு ஆலங்குளம் ஒன்றிய சேர்மன் எம். திவ்யா மணிகண்டன் ஏற்பாட்டில் 124 கிலோ எடையுள்ள ஆப்பிள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது

இந்த நிகழ்வில் 124 முளைப்பாரி, கரகாட்டம், ஒயிலாட்டம், பொய்க்கால் குதிரை உள்ளிட்ட நாட்டுப்புறகலைநிகழ்ச்சிகளுடன் சிலம்பாட்டம் மேளதாளம் வானவேடிக்கை முழங்க ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இருந்து

ஊர்வலமாக சென்று கல்வி தந்தை காமராஜர் திருவுருவு சிலைக்கு 124 கிலோ எடைகொண்ட ஆப்பிள் மாலை அணிவித்துமரியாதைசெலுத்தினார்

இவ் விழாவில் நெல்லைமேற்குமாவட்ட கழகச் செயலாளர் ஆவுடையப்பன், முன்னாள் மாவட்டச் செயலாளர் சிவபத்மநாதன், ஆலங்குளம்எம்எல்ஏமனோஜ் பாண்டியன், ஒப்பந்ததாரர் மணிகண்டன், தொகுதி பார்வையாளர் கணேஷ்குமார் ஆதித்தன்,ஒன்றியசெயலாளர்கள் செல்லத்துரை மாரிவண்ண முத்து, சிவன் பாண்டி, சமுத்திர பாண்டியன், பொன்செல்வன், சிவக்குமார், பேரூர் செயலாளர் ஜெகதீசன், முக்கூடல், லெட்சுமணன், ஒன்றிய கவுன்சிலர்கள் அந்தோணிசாமி கலா கண்ணன், பஞ்சாயத்து தலைவர்கள் பால்விநாயகம் சந்திரசேகர், மீனா சுப்பிரமணியன், கருப்பசாமி, ஜெயராணி குமார் குறிப்பன் குளம் சுப்பிரமணியன் தேனியல், பதிவர், முருகேஷன் ,பிச்சம்மாள், முத்தரசு,

துணைதலைவர்செல்வராஜ்,தங்கச்சாமி,ராதா, கணேசன், வழக்கறிஞர் சபரி கார்த்திக், கோமு, மற்றும் ஒன்றிய, நகர மற்றும் பேரூர் கழக நிர்வாகிகள், பிரதிநிதிகள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.



கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வாம் பேரூராட்சிக்குட்பட்ட சமாதானபுரம் பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின் (2025 2026) கீழ் ரூ.15.00 இலட்சம் செலவில் கட்டப்பட்டுள்ள நியாயவிலைக் கடையை கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். அதனை தொடர்ந்து கல்வெட்டினையும் திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் குமரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் கே.டி.உதயம், அகஸ்தீஸ்வரம் பேரூராட்சி தலைவர், பொ. அன்பரசிராமராஜன் .,வட்டார தலைவர் டேனியல், அகஸ்தீஸ்வரம் பேரூராட்சி காங்கிரஸ் தலைவர்விஜயகுமார்,அகிலஇந்தியகாங்கிரஸ்கமிட்டிஉறுப்பினர்அரோக்கியராஜன்,ஜா. பிரபா,15 வது வார்டு உறுப்பினர் உட்பட அகஸ்தீஸ்வரம் தமிழக வெற்றி கழக முக்கிய நிர்வாகிகளும், பொதுமக்கள் மற்றும் ஆர்.பாண்டியராஜ் உதவி செயற்பொறியாளர்,பூதப்பாண்டி அகஸ்தீஸ்வரம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர், ராஜாரமேஷ் இளநிலை பொறியாளர் கலந்து கொண்டனர்.



## ஆலங்குளம் அருகே ஸ்டஅக் ஹை டெக் பள்ளியில் கல்வி வளர்ச்சி நாள் கொண்டாட்டம்

ஆலங்குளம் அருகே இடைகால் ஸ்டஅக் ஹை - டெக் பள்ளியில் பாரத ரத்னா காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு கல்வி வளர்ச்சி நாள் கொண்டாட்டம் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்வுகள் அரங்கேறின. மேலும் பள்ளியின் ஓவிய ஆசிரியர் பெஞ்சமின் மாணவர்களுடன் இணைந்து காமராஜரின் ஓவியத்தை விளையாட்டு மைதானத்தில் தத்ரூபமாக வரைந்திருந்தனர் பின்பு கலை நிகழ்வுகள் நிறைவடைந்தது

மாணவர்கள் அனைவரும் ஓவியத்தின் அருகில் குழுவாக நின்று காமராஜருக்குதிருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

நிகழ்வில் பள்ளி முதல்வர் பிரவின்குமார் காமராஜர் வரலாறு குறித்து சிறப்புரை ஆற்றினார். விழா சிறக்க உழைத்த அனைவரையும் பள்ளி தலைவர் முருகன் தாளாளர் புனிதாசெல்வி மற்றும் செயலாளர்ஆஷிஷ்லிங்ஆகியோர் பாராட்டி அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

## கர்மவீரர் காமராஜரின் 124வது பிறந்தநாள் விழா: மாணவர்களுக்கு விளையாட்டுப் போட்டி, பரிசுகள் வழங்கல்



ராணிப்பேட்டை மாவட்டம், கலவை நல்லூரில் செயல்பட்டு வரும் சித்தார்த்தர் இலவச இரவு பள்ளி சார்பில், கர்மவீரர் காமராசர் அவர்களின் 124-வது பிறந்தநாள் விழா நேற்று மாலை 6.30 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது.

ஜெய் பீம் இரவு பள்ளி கூட்டமைப்பின் சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சி, புத்த வந்தன சிறப்பு வழிபாட்டுடன் தொடங்கியது. இரவுபள்ளிநிறுவனர்பி. ராஜசேகர் தலைமை வகித்தார்.

சிறப்பு அழைப்பாளராக அம்பேத்கர் இளைஞர் நற்பணி மன்ற செயலாளரும், ஊர் நாட்டாமையுமான கே. ராஜேந்திரன் கலந்து கொண்டு, கர்மவீரர் காமராசரின் கல்விப் பணிகள் மற்றும் சமூக சேவைகளை நினைவுகூர்ந்து பேசினார்.

விழாவையொட்டி மாணவ மாணவிகளுக்காக பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுப் பொருட்கள் வழங்கி பாராட்டினர்.

நிகழ்ச்சியில் இரவு பள்ளி பொறுப்பாளர் ஆர். சாம்ராஜ், தன்னார்வலர்கள் ஆர். மீனாட்சி, ஆர். ருக்கேஷ் மற்றும் மாணவர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

## ஆலங்குளம் புனித ஜோசப் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் காமராஜர் பிறந்த நாள் விழா



தென்காசி மாவட்டம் ஆலங்குளம் புனித ஜோசப் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் பெருந்தலைவர் காமராஜரின் 124-ஆம் பிறந்த நாள் விழா சிறப்பாக நடைபெறுகிறது.

விழாவிற்கு பள்ளித் தாளாளர் அருட்சகோதரிஜெயராணிதலைமை தாங்கினார்

பள்ளி முதல்வர் அருட்சகோதரி வணக்கப்பிரகாசி முன்னிலை வகித்தார்.

பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் மரியா அருள் பாஸ்கர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட விழாவில்

சிறப்பு விருந்தினராக நம்ம டாக்டர் இம்மானுவேல் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசளிப்பு, வ ழ ங் கி சிறப்புரையாற்றினார்.

முன்னதாக இறை வணக்கப் பாடலுடன் தொடங்கியது பின்பு நமது டாக்டருக்கு உற்சாக வரவேற்பு வழங்கப்பட்டது.

இவ்விழாவில் மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் காமராஜர் பற்றிய சிறப்புரை, மற்றும் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் நாடகம் பல்வேறு, போட்டிகளும் நடைபெற்றது.

இவ் விழா இறுதியில் தேசிய கீதத்துடன் விழா நிறைவடைந்தது.

## விருத்தாசலத்தில் அதிமுகவிலிருந்து நூற்றுக்கும் மேற்பட்டோர் விலகி தவெகவில் இணைந்தனர்

கடலூர் மாவட்டம் விருத்தாசலம் தமிழக வெற்றிக்கழகத்தின் கடலூர் மேற்கு மாவட்டத்தின் செயலாளர் எருமனூர்விஜய்தலைமையில் அதிமுகவில் இருந்து விலகி ஏராளமானோர் இணைந்தனர்,

தமிழக வெற்றி கழகத்தின் கடலூர் மேற்கு மாவட்டத்தின் ஒன்றிய துணைச் செயலாளர் வேல்முருகன் தலைமையில் கடலூர் அதிமுக விவசாய அணி தெற்கு ஒன்றிய செயலாளர் செங்கல்வராயன் அவர்களது ஆதரவாளர்கள் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட கட்சி நிர்வாகிகளுடன்,

தமிழக வெற்றி கழகத்தின் கடலூர் மேற்கு மாவட்ட செயலாளர் எருமனூர் விஜய் முன்னிலையில் கட்சியில் இணைந்தனர் கட்சியில் இணைந்த பெண்கள் ஆண்கள் அனைவருக்கும் மாவட்ட செயலாளர் விஜய் சால்வை அனைத்து கட்சியின் நினைத்துக் கொண்டார்..பின்னர் கட்சியில் இணைந்த நிர்வாகிகள் உடன் தீய சக்தி திமுகவை அழைக்க தமிழக வெற்றி கழகத்தின் தலைவர் விஜயின் உடன் இருந்து அனைவரும் பணியாற்ற வேண்டும் இதுவே நமது கடமை என கட்சியில் இணைந்தவர்களிடம் மாவட்ட செயலாளர் விஜய் கூறினார், இந்நிகழ்ச்சியில் தவெக விருத்தாசலம் மேற்கு ஒன்றிய செயலாளர் வெங்கடேசன், இணை செயலாளர் சூர்யா,இளைஞர் அணி நிர்வாகி விஜய் குமார்,ஒன்றிய செயற்குழு உறுப்பினர் வீரப்பன்,மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## "பாஜக கூட்டணியில் திமுக ஒருபோதும் இடம்பெறாது" ஜெயராம் ரமேஷ் நம்பிக்கை

புதுடெல்லி: பாஜக மற்றும் திமுகவின் கொள்கைகள் வெவ்வேறானவை என்பதால் அவை ஒருபோதும் ஒன்றிணைய முடியாது என்று ஜெயராம் ரமேஷ் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் வரும் 20-ம் தேதி தொடங்க உள்ளது. ஆகஸ்ட் 13 வரை இந்தக் கூட்டத் தொடர் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதை முன்னிட்டு, வரும் 19-ம் தேதி மத்திய அரசு சார்பில் அனைத்துக் கட்சிக் கூட்டம் நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத் தொடரின்போது நாடாளுமன்றத்தில் அரசு அறிமுகப்படுத்த



உள்ள மசோதாக்கள் குறித்த விவரம் இதுவரை வெளியாகவில்லை. எனினும், தொகுதி மறுவரையறை மசோதா மீண்டும் அறிமுகப்படுத்தப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த மசோதா கடந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் அறிமுகப்படுத்தப்பட்டது. எனினும், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லாததால், அரசியல் சாசன திருத்தம் கோரும் இந்த மசோதா நிறைவேறவில்லை.

திரிணமூல் காங்கிரஸ் கட்சி மற்றும் சிவ சேனா (உத்தவ் தாக்கரே) கட்சி ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள பிளவு காரணமாகவும், இந்தியா கூட்டணியில் இருந்து திமுக வெளியேறியுள்ளதன் காரணமாகவும் இந்த மசோதா இம்முறை நிறைவேற வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது.

இந்த பின்னணியில், இந்த விவகாரம் குறித்து டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ்செய்தித்தொடர்புபொதுச்செயலாளர் ஜெயராம் ரமேஷ், "பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக் கூட்டணியில் திமுக ஒருபோதும் இடம்பெறாது. இரு கட்சிகளின் கொள்கைகளும் வெவ்வேறானவை என்பதால் அவை ஒன்றிணைய வாய்ப்பில்லை.

கடந்த 8-ம் தேதி நடைபெற்ற இண்டியா கூட்டணி கூட்டத்தில் திமுக பங்கேற்கவில்லை என்பதும், நாங்கள் தவெகவை ஆதரிக்கிறோம் என்பதும் உண்மைதான். தவெக அரசில் எங்கள் கட்சியைச் சேர்ந்த இருவர் அமைச்சர்களாகவும் இருக்கிறார்கள். எனினும், நாங்கள் தொடர்ந்து திமுகஎம்பிக்களுடன்தொடர்பில் இருக்கிறோம்.

திமுகவுடன் பேச்சுவார்த்தைகளும் நடைபெற்று வருகின்றன. திமுக இன்னும் ஒரு எதிர்க்கட்சியாகவே உள்ளது. அது (மத்தியில்) ஆளும் கட்சியாகவோ அல்லது தேசிய ஜனநாயகக் கூட்டணியின் அங்கமாகவோ மாறவில்லை.

ஸ்டாலின் கூறி இருப்பதைப் படித்தேன். பாஜகவுக்கும்திமுகவுக்கும்இடையே உடன்பாடு இல்லை என்பது அதில் இருந்து தெளிவாகிறது. தொகுதி மறுவரையறை மசோதா வரும்போது, திமுக அதற்கு எதிராக நிற்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்" என்று தெரிவித்துள்ளார்.



ஆவின் பால் பாக்கெட்டுகளில் சுய கணக்கெடுப்பு விளம்பரம் சுய கணக்கெடுப்பு ஜூலை 17ஆம் தேதி முதல் 31 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. இது குறித்து பொதுமக்களிடம்விழிப்புணர்வைஏற்படுத்தும்வகையில் ஆவின் பால் பாக்கெட்டுகளில் சுய கணக்கெடுப்பு விளம்பரம் வெளியிடப்படுகிறது



# ராணிப்பேட்டை மாவட்டம் முத்துகடை பேருந்து நிலையத்தில் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்



வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை வெளியிட்டுள்ள அரசாணை எண் 230, 252 மற்றும் 288-ன் அடிப்படையில் செயல்படுத்தப்பட்டுள்ள "உழவர் அலுவலர் தொடர்புத் திட்டம் (UATT 2.0)"-ஐ ரத்து செய்ய வலியுறுத்தி, தமிழ்நாடு தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில், இன்று மாவட்டத்தலைநகரங்களில் ஒருங்கிணைந்த கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட அலுவலர்கள், UATT 2.0 திட்டம் தோட்டக்கலைத் துறையின் தனித்துவத்தையும், தொழில்நுட்ப அடையாளத்தையும் பாதிப்பதாக குற்றம்சாட்டினர்.

தோட்டக்கலைத் துறை என்பது காய்கறிகள், பழங்கள், மலர்கள், நறுமணப் பயிர்கள், அலங்காரத் தாவரங்கள் மற்றும் மூலிகைப் பயிர்கள் உள்ளிட்ட உயர் தொழில்நுட்பம் சார்ந்த துறையாகும். மாநிலத்தின் உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து பாதுகாப்பு, விவசாயிகளின் வருமான உயர்வு மற்றும் வேளாண் ஏற்றுமதியில் இத்துறை முக்கிய பங்கு வகிப்பதாக அவர்கள் தெரிவித்தனர்.

1979-ஆம் ஆண்டு புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி. ராமச்சந்திரன் தலைமையில் தோட்டக்கலைத் துறை தனித்துறையாக உருவாக்கப்பட்டதாகவும், பின்னர் 2007-ஆம் ஆண்டு மறுசீரமைக்கப்பட்டதன் மூலம் தமிழ்நாடு நாட்டின் முன்னணி தோட்டக்கலை மாநிலமாக வளர்ச்சி பெற்றதாகவும் கூறினர்.

தற்போது நடைமுறைக்கு வந்துள்ள UATT 2.0 திட்டத்தின் கீழ், ஒரு கள அலுவலருக்கு அதிகப்படியான கிராமங்கள் மற்றும் ஆயிரக்கணக்கான ஹெக்டேர் சாகுபடி பரப்புகள் ஒதுக்கப்பட்டுள்ளதால், விவசாயிகளுக்கு தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை உரிய நேரத்தில் வழங்க முடியாத சூழல் உருவாகியுள்ளதாக அலுவலர்கள் தெரிவித்தனர்.

மேலும், எந்தவொரு வல்லுநர் குழுவின் பரிந்துரையோ, அறிவியல் ஆய்வு அறிக்கையோ இன்றி இத்திட்டம் அவசரமாக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், இதனால் களப்பணியாளர்களும் விவசாயிகளும் பல்வேறு நிர்வாக மற்றும் தொழில்நுட்ப சிக்கல்களை எதிர்கொள்வதாகவும் அவர்கள் குற்றம்சாட்டினர்.

இதனால், UATT 2.0 தொடர்பாக வெளியிடப்பட்ட அனைத்து அரசாணைகளையும் தமிழக அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என்றும், இதற்கு முன்பு நடைமுறையில் இருந்த பழைய உழவர் அலுவலர் தொடர்புத் திட்டத்தை மீண்டும் அமல்படுத்த வேண்டும் என்றும் தமிழ்நாடு தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் சங்கங்களின் கூட்டமைப்பு தமிழக அரசை வலியுறுத்தியுள்ளது.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் அனைத்து துறைஅலுவலர்கள்மற்றும்பணியாளர்கள்மக்கள்தொகைக்கணக்கெடுப்பு2027இன்SelfEnumeration(சுயகணக்கெடுப்பு) பதிவு செய்தனர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார் உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்டத்தில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2027இன் https://se.census.gov.in என்கிற இணைய தளம் வாயிலாக SelfEnumeration (சுய கணக்கெடுப்பு) பதிவினை பதிவிட்டு, பதிவிடும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி , முகாம் அலுவலகத்தில் நேற்று (17.07.2026) தொடங்கி வைத்தார்.

# தமிழ்நாட்டில் பனைமரம் சார்ந்த தொழிலையும், தொழிலாளர்களையும் பாதுகாக்க தமிழகத்தில் கள் இறக்க அரசு பரிந்துரை செய்ய வேண்டும்

## தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ள தமிழ்நாடு பனைத் தொழிலாளர்கள் மற்றும் அனைத்து உடல் உழைப்பு கட்டுமான பொது தொழிலாளர் சங்கத்தினர்



கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம்பகுதியில் உள்ள தனியார்திருமணஅரங்கில் இன்று தமிழ்நாடு பனைமரம் பாதுகாப்பு மற்றும் பனைமரம் வளர்ப்பு குறித்த மாநில அளவிலான மாவட்ட தலைவர்களுக்கான கலந்தாலோசனை கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தமிழ்நாடு பனை தொழிலாளர்கள் அமைப்பின் மாநில தலைவர் ராதா தலைமை தாங்கினார். தமிழ்நாடு மாநில மகளிர் அணி தலைவர் ரீனா என்கிற இருதயமேரி முன்னிலை வகித்தார்.மாநிலமகளிர் அணி ஒருங்கிணைப்பாளர் சங்கீதா வரவேற்புரையாற்றினார். சிறப்பு அழைப்பாளர்களாக, தமிழ்நாடு பனைத் தொழிலாளர் நல வாரிய மாநிலபொதுச்செயலாளர் மாரியப்பன், மாநில பொருளாளர் வசந்தி, மாநில இளைஞரணி தலைவர் சார்லஸ், மாநில இளைஞரணி செயலாளர் ஆனந்த், கோவை மாவட்ட சமூக ஆர்வலர் பெஞ்சமின், ஆகியோர் கலந்து கொண்டு பனைமர தொழிலாளர்களின் வாழ்வை காத்திட தங்களது கருத்துக்களை தெரிவித்தனர். தொடர்ந்து செய்தியாளர்களைசந்தித்துபேசிய அமைப்பின் மாநில பொதுச் செயலாளர் மாரியப்பன் கூறியதாவது..தமிழகத்தில் கொஞ்சம் கொஞ்சமாக பனைமர தொழிலும், பனை மரம் சார்ந்த தொழிலாளர்களும் அழிந்து கொண்டே வருகின்றனர். இத்துறையை காக்கவும், இத்துறையை சார்ந்துள்ள பல்வேறு தொழிலாளர்களின் வாழ்வை மீட்கவும், தமிழக அரசு இத்துறைக்கென்று தனி வாரியம் அமைத்திருந்தது. அப்பொழுது இந்த துறைக்கு எர்ணாவூர் நாராயணன் என்பவர் வாரிய தலைவராக இருந்து பனைமரங்களை காக்கபல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டார். தமிழகத்தில் பனை மரத்தின் மூலமாக கிடைக்கும், பதநீர், நுங்கு, ஒலை சார்ந்த கலைகள், வளர்வதற்கு ஆதரவு தர வேண்டும், அதற்கு தமிழக அரசு கல் இறக்க அனுமதி வழங்கவேண்டும் எனவும், அவ்வாறு வழங்கும் பட்சத்தில் இத்துறைக்கான தனி மகத்துவம் கிடைக்கும். பனைமரத்தின் பண்பாடுகள் பொதுமக்களுக்கு அதிகரிக்கும், இத்துறையை நம்பி, பல்வேறு தொழிலாளர்கள், மீண்டும் இத்துறையை மீட்க முன் வருவார்கள். அப்பொழுது இத்துறையின் வளர்ச்சி பெருகும் என்று தெரிவித்தார் எனவே அரசு கருணை கூர்ந்து இத்துறையை பாதுகாக்க கள் இறக்க அனுமதி வழங்கபரிந்துரைசெய்து இத்துறையை சார்ந்த தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை காக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டு கொண்டார்

இந்த நிகழ்ச்சியில் மாநில மகளீரணி தலைவி, ரீனா, மாநில மகளிரணி ஒருங்கிணைப்பாளர் சங்கீதா, மாநில தலைவர் ராதா, மாநில பொருளாளர் வசந்தி, மாநில செய்தி தொடர்பாளர் ஆஜிரா பிபி, மாநில இளைஞரணிசெயலாளர்ஆனந்த், மாநில இளைஞரணி தலைவர் சார்லஸ், மாநில இளம் தலைவர் ஹரி ஹர சுதன், மாநில அனைத்து மாவட்ட தலைவிகள், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### காமராஜரின் 124வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

# தூத்துக்குடி மாநகர மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் 500 பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்



பெருந்தலைவர் காமராஜரின் 124-வது பிறந்தநாளை முன்னிட்டு, தூத்துக்குடி மாநகர மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் வட்டக்கோவில் மெயின் பகுதியில் 500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மாநகர மாவட்டபொதுச்செயலாளர் மைக்கில் பிரபாகர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், 500 பயனாளிகளுக்குச் சேலை மற்றும் நோட்டுப் புத்தகங்கள் வழங்கினர். இந்நிகழ்ச்சியில், மாநகர மாவட்டத் தலைவர் எஸ்.எம்.சகாயராஜ் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.பி.சுடலையாண்டி நலத்திட்ட உதவிகளை வழங்கினர். சிறுபான்மை மாவட்ட தலைவர் மைதீன், 4வது வார்டுதலைவர்ராஜரத்தினம், 10வது வார்டு தலைவர் சுப்ரமணியன் முன்னிலை வகித்தனர் மற்றும் காங்கிரஸ் நிர்வாகிகள்கலந்துகொண்டனர். விழா ஏற்பாடுகளை மாநகர மாவட்ட பொதுச் செயலாளர் மைக்கில் பிரபாகர் மற்றும் வார்டு நிர்வாகிகள் செய்திருந்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட வழக்கறிஞர் பர்ணபாஸ், கிழக்கு மண்டல தலைவர் ஐசன் சில்வா, தெற்கு மண்டல தலைவர் நிர்மல் குமார், பிரிவு செயலாளர் மாரியப்பன் கலை, ஊடகப் பிரிவு மாவட்ட தலைவி ஜெய ஜோதி, மாவட்ட செயலாளர்கோபால்,வர்த்தக தலைவர் ஏ.ஜே.அருள்வளவன், மாவட்ட மகளிர் தலைவி ப்ரீத்தி, Ex மாவட்ட தலைவி முத்து விஜயா, அமைப்புசாரா மாவட்டம்சேவியர்அம்மாள், மாவட்ட துணை தலைவர் ராஜாராம், மாவட்ட து. தலைவர் ரஞ்சிதம்ஜெயராஜ், மாவட்ட மீனவர் தலைவர் சிமியான், 8வது வார்டு கிழக்கு பகுதி தலைவி அசன் பாத்,3வது வார்டு தலைவி வசந்தி, இளைஞர் அணி காங்கிரஸ்ரெனிஸ்,4வது வார்டு செயலாளர் மரிய சிங்கம், நாலாவது வார்டு துணைத் தலைவர் ராஜகோபால் மற்றும் காங்கிரஸ் நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# காமராஜர் பிறந்தநாள் விழா; தூத்துக்குடி மாநகர மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் மாலை அணிவித்து



தூத்துக்குடி: தமிழக முன்னாள் முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜரின் 124-வது பிறந்தநாளை முன்னிட்டு, தூத்துக்குடி வ.உ.சி மார்க்கெட் அருகே உள்ள அவரது சிலைக்கு, மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவர் சகாயராஜ் தலைமை தாங்கினார். இதில் மண்டல தலைவர்கள் ஐசன்சில்வா, நிர்மல் கிறிஸ்டோபர், பொதுச் செயலாளர்கள் கோபால், மைக்கேல் பிரபாகர், ஜெபராஜ், மாவட்டச் செயலாளர் இக்னேசியஸ், மாவட்ட துணைத் தலைவர்கள் நாகேந்திரன், ராஜாராம், தென்மண்டல மாநில பேச்சாளர் பார்த்திபன், துணை அமைப்புத் தலைவர்கள் எஸ்சி துறை, பிரபாகரன், மீனவர் காங்கிரஸ் சிமியோன், அமைப்பு சாரா காங்கிரஸ் சேவியரம்மாள், ஊடகப்பிரிவு ஜெயஜோதி மற்றும் வார்டு தலைவர்கள், ரத நிர்வாகிகள் எனப் பலரும் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பெருந்தலைவருக்கு மரியாதை செலுத்தினர்.

# நெடுஞ்சாலையில் நடைபெற்றுவரும் ரெயில்வே மேம்பாலப்பணியை தென்காசி எம்.பி. ராணி ஸ்ரீகுமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்

தென்காசியிலிருந்து திருநெல்வேலி செல்லும் நான்கு வழிச்சாலையில் பாவூர்சத்திரம் பகுதியில் நடைபெற்றுவரும் ரயில்வே மேம்பாலப்பணி* மற்றும் *தென்காசி முதல் இலஞ்சி செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் நடைபெற்றுவரும் ரயில்வே மேம்பாலப்பணியையும் தென்காசி நாடாளுமன்ற உறுப்பினர் Dr.ராணி ஸ்ரீகுமார் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். நெடுஞ்சாலைத்துறையின் உதவி கோட்டப்பொறியாளர்கள் சத்தியபதி,கஸ்தூரிராணி மற்றும் ரயில்வே சீனியர் பிரிவு பொறியாளர் பிரேம்குமார் அவர்களுடன் ஆய்வு மேற்கொண்ட MP அவர்கள், இப்பாலப்பணிகளால் பொதுமக்கள்தொடர்ந்து சிரமங்களை சந்தித்து வருவதாகவும், ஆகவே *மேம்பாலப்பணியை துரித்தப்படுத்த அதிகாரிகளிடம் கேட்டுக்கொண்டார்.* இப்பாலப்பணிகளில் ஏதும் தாமதம் ஏற்பட்டால் உடனடியாக தனக்கு தகவல் கொடுக்கவும், அதனை தான் சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் பேசி உடனடியாக சரி செய்து தருவதாகவும், எக்காரணம் கொண்டும் *மேம்பாலம் அமைக்கும் பணியை தாமதமாகாமல் விரைந்து முடித்து வரும் ஜனவரி மாதம் முதல்வாரத்தில்இரண்டு மேம்பாலங்களும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென MP அவர்கள் கேட்டுக் கொண்டார். இந்நிகழ்வில் மாவட்ட செயலாளர் (தெற்கு) ஜெயபாலன் அவர்கள், சேர்மன்கள் காவேரிசீனித்துரை, சின்னத்தாய் ஒன்றிய செயலாளர்கள் அழகுசுந்தரம்,சீனித்துரை,நகர செயலாளர் சாதீர்,பேரூர் கழக செயலாளர் முத்தையா,மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் ரகீம், சாபீக்அலி, சுப்பிரமணியன், செல்வவிநாயகம் ,சுந்தரராஜன் ,ஆனந்தராஜ் ,முத்து சுப்பிரணியன் ,ராமராஜ், தேவிசிவக்குமார், கணேசன், பவுல் மற்றும்கழகநிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



DHINATH DHALAM Morning Tamil Daily 18.07.2026



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி தலைமையில் நேற்று (17.07.2026) நடைபெற்றது. உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

# “குற்றவாளியை காப்பாற்றும் அமைச்சர்; பழநிக்கே மொட்டை போட்ட விஜய் ஆட்சி” திமுக நிர்வாகி பரந்தாமன் சாடல்



சென்னை: "பழநியில் மொட்டை போட்டு பார்த்திருப்போம்; ஆனால் பழநிக்கே மொட்டை போட்டுள்ளது விஜய் ஆட்சி.தமிழ்நாட்டு மக்கள் முகத்தில் விபூதி அடித்துள்ளது தவெக. முதல்வர் விஜய் ஏன் இது குறித்து வாய் திறக்கவில்லை என திமுக சட்டத்துறை இணைச் செயலாளர் பரந்தாமன் கேள்வி எழுப்பியுள்ளார்.

பரந்தாமன் செய்தியாளர்களிடம்பேசும்போது, "பழநி கோயில் நில மோசடி விவகாரத்தில், பினாமி பரிவர்த்தனை நடந்துள்ளதோ என்ற சந்தேகம்எழுந்துள்ளது. கொடைக்கானலில் இருந்து ஆளைக் கூட்டி வந்து பத்திரப்பதிவு செய்கிறார்கள்,என்றால், ஏற்கெனவே இந்த அரசு ஆளை ஃபிக்ஸ் செய்திருக்கிறது. நில மோசடி தொடர்பாக இந்து அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ், அறியாமைகாரணமாக அதிகாரிகள் பத்திரப்பதிவு செய்துவிட்டனர் என்கிறார். விசாரணை தொடங்குவதற்கு முன்பே அமைச்சர் இவ்வாறு கூறுவது, குற்றவாளியை காப்பாற்றுவதற்கு அவர் துணை போவதையே காட்டுகிறது. அமைச்சர் குற்றவளியை காப்பாற்றுகிறார் என்பது தான் எங்கள் குற்றச்சாட்டு.

நில மோசடி விவகாரத்தில் கிரயம் செய்திருக்கக்கூடிய 2 பேர் யாரென்று போலீஸ் தரப்பில் வெளிக்காட்டவில்லை. எங்களுக்கு கிடைத்த தகவலின்படி, குற்றம்சாட்டப்பட்ட 2 பேரும் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் சொத்து வாங்கக்கூடிய அளவிற்குக் கூட பொருளாதார ரீதியாக பலம் வாய்ந்தவர்கள் இல்லை என்பது தெரியவந்துள்ளது.அப்படி இருக்கும்போது எப்படி ரூ.2கோடியில் பணப்பரிவர்த்தனை செய்ய முடியும்? சமூக வலைதளங்களில் இந்த அரசையும்,அரசு செய்யக்கூடிய குற்றங்களையும், முதல்வரையும் விமர்சித்தால், இரவோடு இரவாககைது செய்கிறது போலீஸ்.

ஆனால் பழநி கோயில் நில மோசடி விவகாரத்தில் தொடர்புடைய துணை சார்பதிவாளரை இன்னும் ஏன் தவெக போலீஸ் கைது செய்யவில்லை?. இங்கே இருக்கக்கூடிய அமலாக்கத் துறை எங்கே? எஃப்ஐஆரில் இடம்பெற்றுள்ள 4 பேரில் ஒருவர் கூட இன்னும் ஏன் கைது செய்யப்படவில்லை?

பழநி கோயில் நில மோசடி விவகாரத்தில் தொடர்புடைய நிலமும், கோயில்களும், கடந்த திராவிட மாடல் ஆட்சியில் பாதுகாக்கப்பட்டன. பழநிக்கு மொட்டை போட்டு பார்த்திருப்போம்;ஆனால்பழநிக்கே மொட்டை போட்டுள்ளது விஜய் ஆட்சி.தமிழ்நாட்டு மக்கள் முகத்தில் விபூதி அடித்துள்ளது தவெக.


அதிகாரிகளை காப்பாற்றுவதற்கு இவர்களாகவே முன்வந்து பேட்டியளிக்கின்றனர். அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ், அறியாமை காரணம் என்கிறார். பத்திரப் பதிவுதுறை அமைச்சர் ஒரு மாதிரியும், அரசு தரப்பு வழக்கறிஞர் அதை மாற்றியும் பேசவேண்டியதன் அவசியம் என்ன? இந்த சதிக்கு பின்னால் இருப்பது யார்? ஏன் உண்மைத்தன்மையை அவர்கள் விசாரிக்கவில்லை.

திமுக கோயில் நிலத்தையோ, அரசு நிலத்தையோ யாருக்கும்பதிவு செய்து தரவில்லை; ஆனால் தற்போது கோயில் நிலத்தை , இன்னொருவருக்கு பதிவு செய்து கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் எப்படி எங்களை கேள்வி கேட்க முடியும். பழநி விவகாரம் குறித்து சிபிசிஐடி தற்போது விசாரணை நடத்தி வருகிறது. விசாரணை ஒழுங்காக நடைபெறவில்லை என்றால் நீதிமன்றத்தை நாடுவோம். அமைச்சர்களுக்கு நாவடக்கம் தேவை.

முதல்வர் விஜய் கோட்டு சூட்டு எல்லாம் போட்டுவிட்டு, 2 மாதங்களில் ஊழலை ஒழித்துவிட்டேன்எனவீரவசனம் பேசுவது சரியில்லை. அவரின் முதுகுக்கு பின்னாலே ஊழல் புரையோடிக் கிடக்கிறது. முதல்வர் ஏன் இது குறித்து வாய் திறக்கவில்லை.

கடந்த ஆட்சியில் ஏதோ ஒரு பிரச்சினை நடந்தால், முதல்வர் விஜய், சி. எம் சார்... என ஓடி வருவார். இப்போது எங்கே போனார். முதல்வர் விஜய்க்கு தெரிந்துதான் இந்த நிலம் சட்ட விரோதமாக பதிவு செய்யப்பட்டிருக்கிறது. அவருக்கு தெரியவில்லை என்றால் முதல்வர் விஜய் வந்து சொல்லட்டுமே." என்று தெரிவித்துள்ளார்.

# தென்காசி தொல்லியல் தளத்தில் சங்க கால தொழிற்கூட கட்டமைப்புகள் கண்டெடுப்பு: அமைச்சர் ராஜ்மோகன் பகிர்வு



சென்னை: 'தென்காசி மலையடிப்பட்டி தொல்லியல் தளத்தில், சங்க காலத்தில் இரும்புக் கருவிகள்,

ஆடி மணிகள், சங்கு வளையல்கள் மற்றும் நெசவு தொழிற்கூடங்கள் சிறப்புற செயல்பட்டதற்கான கட்டமைப்புகள் கிடைக்கப் பெற்றுள்ளன' என அமைச்சர் ராஜ்மோகன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் தளப் பதிவில், 'தென்காசி மாவட்டம், கரிவலம்வந்தநல்லூர் அருகேயுள்ள மலையடிப்பட்டியில் அமைந்துள்ள தொல்லியல் தளத்தில் அகழாய்வு கடந்த மூன்று மாதங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த அகழாய்வில் நூற்றுக்கும் மேற்பட்ட தொல்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இதில் நுண்கற்கால கற்கருவிகள், சங்கு வளையல்கள், சுடுமண்ணாலான தக்களிகள், வட்டச்சில்லுகள், சுடுமண் மணிகள், சூதுபவள மணிகள், ஆடி மணிகள், தங்கத்திலான மணி, செவ்வக பகடைக்காய், இரும்பு பொருட்கள் மற்றும் செப்பு நாணயங்கள் ஆகியவை கிடைக்கப்பெற்றுள்ளன.

இவை தவிர சங்க கால சதுர வடிவிலான செங்கல் கட்டுமானம், முழுமையான பானைகள், மூடியுடன் கூடிய கருப்பு வண்ணம் தீட்டப்பட்ட பானைகள், துளையிடப்பட்ட கிண்ணங்கள் போன்றவைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.சங்ககாலத்தில் இரும்புக் கருவிகள், ஆடி மணிகள், சங்கு வளையல்கள் மற்றும் நெசவு தொழிற்கூடங்கள் சிறப்புற செயல்பட்டதற்கான கட்டமைப்புகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

தொடர் தொல்லியல் பணிகளும், அறிவியல் பூர்வமான ஆய்வு முடிவுகளும் தமிழர்களின் தொன்மையை மேலும் உலகிற்கு பறைசாற்றும் என நம்புகிறோம்' எனத் தெரிவித்துள்ளார்.

# நீட் மறுதேர்வு முடிவுகள்: மனநல ஆலோசனை பெற எண்களை அறிவித்தது தமிழ்நாடு அரசு!



சென்னை: நீட் மறுதேர்வு முடிவுகள் வெளியாகியுள்ளதையடுத்து மாணவர்கள், மனநல ஆலோசனைகளைப் பெற கட்டணமில்லா தொலைபேசி எண்களை தமிழக அரசு அறிவித்துள்ளது.Rail Freight

இதுகுறித்து வெளியிட்டுள்ள அறிவிப்பில், "தமிழ்நாடு அரசின் 'நட்புடன் உங்களோடு' திட்டத்தில் மனநல ஆலோசனைப் பெற கட்டணமில்லா தொலைபேசி எண் 14416 அல்லது 104 அழைக்கவும். 2026-27 கல்வியாண்டின் நீட்தேர்வு முடிவுகள் நேற்று (16.07.2026) வெளியாகி உள்ளது. மாணவர்களின் மன உறுதி மற்றும் மனநலம்காக்கும்வகையில் தமிழ்நாடு அரசின் "நட்புடன் உங்களோடு" திட்டம் மூலம் தொலைபேசி வழியாக மனநல ஆலோசனைகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் மனநல ஆலோசனைகள் பெறுவதற்கு தயங்காமல் 14416 அல்லது 104 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இச்சேவை மனநல மருத்துவர்கள் மற்றும் மனநல ஆலோசகர்கள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது"

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மேற்கு வங்கத்தில் பள்ளி வேன் மீது ரெயில் மோதி 2 மாணவர்கள் உட்பட மூவர் உயிரிழப்பு



கொல்கத்தா:

மேற்கு வங்கத்தில் 10 குழந்தைகளை ஏற்றிச் சென்ற பள்ளி வேன் ஒன்று ரயில்வே தண்டவாளத்தைக் கடக்க முயன்றபோது, அதன் மீது ரயில் மோதிய விபத்தில் இரண்டு மாணவர்கள் உட்பட 3 பேர் உயிரிழந்தனர்.

விபத்தில் படுகாயமடைந்தவர்கள் அருகில் உள்ள முர்ஷிதாபாத் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்கு வங்கத்தின் முர்ஷிதாபாத் மாவட்டத்தில் உள்ள கர்ண சுபர்ணா ரயில் நிலையத்துக்கு அருகே உள்ள ரயில்வே கிராசிங்கில் இன்று காலை 7 மணி அளவில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. டாடா சுமோ வேனில் பள்ளிக் குழந்தைகளுடன் சென்ற வேன், ரயில்வே கேட் திறந்து இருந்ததால் அதன் வழியாக தண்டவளாத்தைக் கடக்க முயன்றபோது அதன் மீது ரயில் மோதியுள்ளது.

இந்த விபத்தில் இரண்டு குழந்தைகள் உட்பட மூவர் உயிரிழந்துள்ளனர். இதில், மதிவண்டியில் சென்ற ஒருவரும் சிக்கியுள்ளார். விபத்தைஅடுத்து,சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த அப்பகுதி மக்கள் உயிரிழந்தவர்களின் உடல்களை மீட்டதோடு, காயமடைந்தவர்களை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். முர்ஷிதாபாத் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள காயமடைந்தவர்களில் மூவர், அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவத்தை அடுத்து அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். ரயில்வே மற்றும் கேட் கீப்பரின் அலட்சியம் காரணமாகவே இந்த விபத்து நிகழ்ந்ததாகவும், கேட் கீப்பர்போதையில்இருந்திருக்கலாம் என்றும் உள்ளூர் மக்கள் கூறியுள்ளனர்.

விபத்து குறித்து விசாரிக்க 10 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளதாக ரயில்வே தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்தைஅடுத்து,அப்பகுதியில் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பள்ளிக் குழந்தைகள் உள்ளிட்ட மூவர் உயிரிழந்த சம்பவம் மனதை உலுக்கும் நிகழ்வு என்று மேற்கு வங்கத்தைச் சேர்ந்த மத்திய அமைச்சர் சுகந்த மமஜும்தார் தெரிவித்துள்ளார்.

"எந்தவொரு உயிர் இழப்பும் துயரமான துதான்; ஆனால்,குழந்தைகளின் மரணம் இன்னும் அதிக மனவேதனை அளிப்பதாகும். இது குறித்து விரிவான விசாரணை அவசியம்; ரயில்வே நிர்வாகம் இது தொடர்பாகத் தனிப்பட்ட விசாரணை ஒன்றை மேற்கொள்ளும் என்று நான் நம்புகிறேன்." என்று சுகந்த மமஜும்தார் தெரிவித்துள்ளார்.

# US strike in Iran's Bandar Khamir 'kills' 7, video shows bridges blown apart



The United States expanded its airstrike campaign against Iran early on Friday by hitting more bridges, electrical equipment and collapsing a tower at a key Iranian port, part of US President Donald Trump's threats to start striking infrastructure to pressure Tehran to ease its chokehold on the Strait of Hormuz.

The US airstrikes hit bridges overnight into Friday in Iran's southern Hormozgan province, killing at least seven people, Iranian state television reported. The attacks hit Bandar Khamir, a city on Iran's coast on the Strait of Hormuz.

The highway and railway bridge strikes appeared aimed at cutting off Bandar Abbas, Iran's main port, from roads leading into the Islamic Republic's central region onward to Tehran, the capital. Videos doing the rounds on social media show bridges, including in Bandar Khamir, blown apart.

The US military's Central Command said it hit dozens of targets in its latest airstrikes, which concluded at dawn Friday, the sixth night in a row of American attacks.

The strikes also collapsed a tower at Iran's Chabahar port on the Gulf of Oman, a key trade route for landlocked, neighbouring Afghanistan, the state-run IRNA news agency reported. Chabahar port has been a repeated target of American airstrikes. Iranian state media acknowledged a third round of strikes on the facility without immediately acknowledging the tower's collapse. Iran described the tower as overseeing commercial traffic into the port.

Iran launched new missile attacks against US-allied nations in West Asia, including Qatar, a key mediator in the war. It also damaged a power and water desalination plant in Kuwait – something crucial in the small, desert nation. Authorities in Kuwait said Iran attacked a power and water desalination plant, causing widespread damage to the station. About 90 per cent of drinking water comes from desalination, and any disruption can threaten life.

Kuwait said it had extinguished the blaze and was working to assess the damage and restore the station. Jordan's military said it intercepted three incoming missiles Friday morning, launched by Iran.

Explosions also could be heard Friday morning in Irbil and Sulaymaniyah in northern Iraq's semi-autonomous Kurdish region as air defences targeted incoming fire. The attack apparently targeted the Iranian Kurdish dissident group Komala, killing at least nine people and wounding others, an official told news agency AP. The interim ceasefire agreed to last month has collapsed, and the region has endured days of back-and-forth attacks by the US and Iran as they battle for control of the strait. Iranian officials say US strikes have killed dozens of people and wounded hundreds of others, with new casualties reported in Friday's strikes. When the US and Israel launched the war on Iran on February 28, Tehran effectively closed the strait to shipping traffic, a move that sent the price of oil soaring and gave Iran major leverage in negotiations.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.